769

STANDARD TAMIL READERS

FIRST BOOK

769

வித்தியா மாலிகை

/14

முதற் புத்தகம்

TB
031(1)
N14
85151

...LITERATURE SOCIETY FOR INDIA
...llahabad, Calcutta and Colombo

APPROVED BY THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION

Standard Tamil Readers

FIRST BOOK

வித்தியா மாலிகை

முதற் புத்தகம்

769
2.14

SEVENTH EDITION

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
MADRAS, ALLAHABAD, CALCUTTA AND COLOMBO
1914

031(1)
N14

பொருள் அட்டவணை—CONTENTS

பாடம்.		பக்கம்.
1.	ஓரெழுத்துச் சொற்கள்.—Words of One Letter	3
2.	ஈரெழுத்துச் சொற்கள்.—Words of Two Letters	4
3.	மூன்றெழுத்துச் சொற்கள்.—Words of Three Letters...	5
4.	நான்கெழுத்துச் சொற்கள்-Words of Four Letters	6
5.	இரண்டு முதல் நான்கு எழுத்துச் சொற்கள்.—Words of Two to Four Letters	7
6.	ஐந்தெழுத்துச் சொற்கள்.-Words of Five Letters	8
7.	ஏழாம் பாடம்.-Simple Words.	9
8.	ஜெந்துக்களின் தொனி.—Animal Cries	10
9.	ஒன்பதாம் பாடம். — Simple Words	11
10.	வேலை.—Work	12
11.	நீதி வசனங்கள்.—Aphorisms ...	13
12.	சிறுவர் நடக்கும் ஒழுங்கு.—Good Conduct	14
13.	பை சொன்ன கதை.—The Pie.	15
14.	குருவும் சீஷனும்.—Teacher and Disciple	16
15.	தேக உறுப்பு.—The Body ...	17
16.	உறுப்புக்களின் தொழில்.—The Actions of the Body ...	18
17.	காற்றாடி.—The Kite	18
18.	குருடனும் விளக்கும்.—The Blind Man and the Lantern ...	20
19.	பசு.—The Cow	21
20.	கடன்.—Debt	22
21.	கால அளவு.—Time	23
22.	வரிக்குதிரை.—The Zebra ...	24
23.	மாம்பழம்.—The Mango ...	25
24.	பூனை.—The Cat	28
25.	வியாபாரியும் குரங்குகளும்.—The Merchant and the Monkeys	29
26.	பெரிய குரு ஒரு பிள்ளைக்குக் காட்டின இரக்கம். — The Great Teacher who showed Pity.	31
27.	பயத்தினால் ஓநாயின் குணம் மாறினது.—A Wolf tamed by Fear	33
28.	ஔவையும் ஒரு மனிதனும்.—A Story of Avvei	35
29.	நல்ல பையனும் கெட்ட பையனும்.-The Good and the Bad Boy	36
30.	சூரியனும் காற்றும் மழையும்.—The Sun, the Wind and the Rain	38
31.	தாய்.—The Mother ...	39
32.	இரண்டு நாய்கள். — The two Dogs	40
33.	முயலும் ஆமையும்.—The Hare and the Tortoise ...	43
34.	பிரயாணியும் புஷ்பச்செடியும்.-The Traveller and the Flower.	44
35.	பெரிய குருவும் பிள்ளைகளும்.—The Great Teacher and the Children	45
36.	பூனையும் பையனும்.—The Cat and the Lad	47
37.	ஓடிப்போன பூனைக்குட்டி.—The truant Cat	49
38.	பூனை தோட்டத்தில் திரிந்தது.-The Cat in the Garden ...	50
39.	பூனையும் எலியும்.—The Cat and the Rat	52
40.	சுந்தரமும்பரதேசியும்-Sundaram and the Pilgrim	55
	கர்த்தருடைய ஜெபம்	58
	காலை ஜெபம்	58
	மாலை ஜெபம்	58
	உலகநீதி (சுருக்கம்)	59
	உலகநீதி அரும்பத விளக்கம் ...	61
	இராஜாவை வாழ்த்தல். — God Save the King	63

85151

வித்தியா மாலிகை

முதற் புத்தகம்

முதற் பாடம்.

ஓரெழுத்துச் சொற்கள்

ஆ
ஈ
ஏ
ஓ
கா
தா
நா
மா
வா

பூ
சீ
நீ
கை
வை
தை
பை
மை
போ

கா நா.
மா தா.
நீ வா.
ஓ பூ தா.
நீ கை வை.

வா மா தா.
நீ போ.
பூ தா.
கை வை.
நீ பை தை.



இரண்டாம் பாடம்.

ஈரெழுத்துச் சொற்கள்

இது யார் வீடு?
ஐயா, இது பாட சாலை.
அது என் மேல் வீடு.
கல் தூண் நாலு பார்.
ஏழு மணி அடி.
உன் புது மேசை எடு.
மாமா, அது யார் பசு?
பையா, அது என் பசு.
ஆறு படி பால் கொடு.
உன் ஊர் பேர் சொல்.

மூன்றும் பாடம்.

மூன்றெழுத்துச் சொற்கள்

தம்பி! இதின் பெயர் என்ன?
அண்ணா! இதின் பெயர் சேவல்.
இந்த நல்ல சேவல் கூவும்.
இதின் சிறகு கரிய நிறம்.
நீண்ட காலும் வாலும் உண்டு.
நல்ல குணம் உள்ள புட்சி.
அண்ணா! சேவல் ஒன்று கொடும்.
தம்பி! அதின் நீளம் என்ன?
அண்ணா, பெரிய சேவல் தாரும்.
தம்பி! உனது பாடம் சொல்லு.
எனது பாடம் சேவல் பாடம்.

நான்காம் பாடம்.

நான்கெழுத்துச் சொற்கள்

குரங்கு காட்டில் பாய்ந்து திரியும்.
பிள்ளையே! இதுதான் குரங்கு.
காட்டிலே அநேகம் குரங்கு திரியும்.
விருக்ஷக் கொம்பில் பாய்ந்து நிற்கும்.
குரங்கு காய்கள் கனிகள் தின்னும்.
கறுத்த குரங்கு பொல்லாத மிருகம்.
குரங்கு அதிகம் உபாயம் உள்ளது.
குரங்கு ஆட்டம் மிகவும் விநோதம்.



ஐந்தாம் பாடம்.

இரண்டு முதல் நான்கு எழுத்துச் சொற்கள்

இது ஒரு கல் வீடு.
ஐயா அது என் வீடு.
நாலு சிறு அறை பார்.

அந்த அறைக் கதவு பூட்டு.
கூடம் திண்ணை அதிக அழகு.
தெற்கு மேற்கு வார்சல் எங்கே?
பத்து முழச் சுவர் கட்டு.

எந்தத் தச்சன் கதவைச் செய்தான்?
உங்கள் தோட்டம் அதிகம் பெரியது.
கிழக்கு வடக்கு எந்தப் பக்கம்?
சமையல் அறைக்கு எத்தனை ஜன்னல்?
கொல்லன் இரும்பு ஆணிகள் செய்தான்.



ஆறும் பாடம்.

ஐந்தெழுத்துச் சொற்கள்

தமையனார் எருதுகளை வண்டியிலே பூட்டினார்.
வண்டியின் எருதுகளைத் துரிதமாய் ஓட்டினார்.
எருதுகள் எப்போதும் பாரங்கள் சுமக்கும்.
கார்த்திகை மாதத்தில் குளிர்ச்சி இருக்கும்.
செந்தமிழ் வித்துவான் கவிகளைப் பாடுகிறான்.
இராத்திரி காலத்தில் சந்திரன் உதிக்கும்.
மாணாக்கன் பாடங்களை நாள்தோறும் படிப்பான்.
மாணாக்கன் புத்தகம் எப்போதும் வாசிப்பான்.
குருக்கள் அவனுக்கு உபதேசம் செய்கிறார்.
தகப்பன் பிள்ளைகள் சொல்வதைக் கேட்கிறார்.
தேவனுடைய போதனையைக் கவனிக்க வேண்டியது.

ஏழாம் பாடம்.

கிளி பச்சை நிறம்.
அன்னப் பட்சி வெள்ளை நிறம்.
காகம் கறுப்பு நிறம்.
யானை புகர் நிறம்.
பொன் மஞ்சள் நிறம்.
இரத்தம் சிவப்பு நிறம்.

கல் கடினம் உள்ளது.
தண்ணீர் குளிர்மை உள்ளது.
நெருப்பு சூடு உள்ளது.

பணம் உள்ளவன் செல்வன்.
குணம் உள்ளவன் நல்லவன்.
புத்தி உள்ளவன் விவேகி.
படிப்பு உள்ளவன் வித்துவான்.
கோபம் உள்ளவன் மூர்க்கன்.
கருணை உள்ளவர் கடவுள்.

எட்டாம் பாடம்.

ஜெந்துக்களின் தொனி

நாய் என்ன செய்யும்?

நாய் குரைக்கும்.

பூனை என்ன செய்யும்?

பூனை உறுமும்.

வாத்து என்ன செய்யும்?

வாத்து குவாக் என்று சத்தம் இடும்.

காகம் என்ன செய்யும்?

காகம் கரையும்.

காளை என்ன செய்யும்?

காளை தொனுப் போடும்.

நரி என்ன செய்யும்?

நரி ஊளையிடும்.

ஆடு என்ன செய்யும்?

ஆடு கத்தும்.

ஒன்பதாம் பாடம்.

கண் இல்லாதவன் குருடன்.

காது கேளாதவன் செவிடன்.

வாய் பேசாதவன் ஊமையன்.

கால் இல்லாதவன் முடவன்.

சுகம் இல்லாதவன் நோயாளி.

கொடை இல்லாதவன் உலோபி.

பணம் இல்லாதவன் ஏழை.

அறிவு இல்லாதவன் பேதை.

தொழில் இல்லாதவன் சோம்பேறி.

கல்வி இல்லாதவன் மூடன்.

அன்பு இல்லாதவன் குரூரன்.

சத்தியம் இல்லாதவன் பொய்யன்.

துன்பம் இல்லாதவன் பாக்கியவான்.

யாரும் இல்லாதவன் அகதி.

பத்தாம் பாடம்.

வேளாளன் பயிர் இடுவான்.

குசவன் பாண்டம் வனைவான்.

உபாத்தியாயர் பாடம்கற்பிப்பார்.

மாணாக்கன் பாடம் படிப்பான்.

வண்ணான் சீலை வெளுப்பான்.

தட்டான்பொன் வேலை செய்வான்.

தச்சன் மரவேலை செய்வான்.

கொல்லன் இரும்புவேலை செய்வான்.

பதினோராம் பாடம்.

நீதி வசனங்கள்

அடக்கம் உள்ள பையன் நல்ல பையன்.
அடக்கம் இல்லாத பையன் கெட்ட பையன்.
கல்வி எந்த நாளும் அழியாத பொருள்.
செல்வம் எந்த நாளும் அழியும் பொருள்.
மெய் எந்தக் காலமும் பேச வேண்டும்.
பொய் எந்தக் காலமும் பேசக் கூடாது.
புண்ணியம் எல்லாரும் செய்யத் தக்கது.
பாவம் ஒருவரும் செய்யத் தகாதது.
இனிய சொற்களை எவரும் விரும்புவார்.
கடுஞ் சொற்களை எவரும் வெறுப்பார்.
நன்மை நல்லது; அதன் பலன் சுபம்.
தீமை கெட்டது; அதன் பலன் துக்கம்.
படித்தவனுக்கு எந்தத் தேசத்திலும் சிறப்பு.
இராஜனுக்கு அவன் தேசத்தில் மாத்திரம் சிறப்பு.

பன்னிரண்டாம் பாடம்.

சிறுவர் நடக்கும் ஒழுங்கு

பிள்ளையே! நான் சொல்வதைக் கேட்டு நட.
விடியும்போது நித்திரையை விட்டு எழுந்திரு.
எழுந்த உடனே கடவுளை வணங்கு.
முகம் கை கால்கள் சுத்தம் பண்ணு.
அதன் பின் உன் பாடங்களைப் படி.
படிக்கும்போது அதிக கவனமாகப் படி.
தெரியாத பாடங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்.
எழுத வேண்டியது இருந்தால் எழுது.
பாடசாலைக்குப் போகுமுன் குளித்துச் சாப்பிடு.
சரியான வேளையில் பள்ளிக்கூடம் போ.
அங்கே பிள்ளைகளுடன் சண்டை செய்யாதே.
உபாத்தியாயருக்கு அடங்கி நட.
அவர் சொன்னவைகளைக் கவனித்துக் கேள்.
பாடங்களைச் சரியாய் ஒப்புவித்து வா.
பாடம் படிக்கிறபோது விளையாடாதே.
தாய் தந்தையர் சொற்படி நட.
பொய் பேசாதே; எப்போதும் உண்மை பேசு.



பதின்மூன்றாம் பாடம்.

பை சொன்ன கதை

ஏன் பேர் பை. சிலர் என்னைக் காசு என்றும், சிலர் தம்படி என்றும் சொல்லுவார்கள். சில இடங்களில் சல்லி என்றும் சொல்லுவார்கள். எனக்கு முகமில்லை. ஆனால் என் முன் பக்கத்தில் பார்த்தால் ஒரு ராஜாவினுடைய முகப் படம் இருக்கிறது. அவர் நமது ஜார்ச் சக்கரவர்த்திக்கு முன் இந்தியாவுக்கு ராஜாவும் சக்கரவர்த்தியுமாய் இருந்தார். நான் அவருடைய தங்கசாலையில் அச்சிடப்பட்டு இருக்கிறேன். பின்பக்கத்தில் பார்த்தால் ஒரு மாலை இருக்கிறது. அந்த மாலைக்குள் என் விலை போடப்பட்டு இருக்கிறது. என்னோடு பதினொரு காசு கூட்டினால் ஒரு அணா ஆகும். நான் அநேக இடங்களுக்குப் போய் இருக்கிறேன். ஒரே இடத்தில் அநேக நாள் இருக்கமாட்டேன். சிறுவர்கள் என்னைக் கொண்டு போய்க் கடைகளில் கொடுத்து மிட்டாய் முதலானவைகளை வாங்கிச் சாப்பிடுவார்கள். ஏழைகளுக்கு என்னை அதிகமாய்க் கொடுப்பார்கள்.

பதினாலாம் பாடம்.

குருவும் சீஷனும்

ஒரு ஊரில் ஒரு குரு இருந்தார். அவர் ஒரு நாள் தமது சீஷனை அழைத்து 'உட்காரு' என்றார். அதைக் கேட்ட சீஷன் குருவைக் கும்பிட்டு அவர் எதிரே உட்கார்ந்தான். அப்போது குரு அவனுக்கு நல்ல புத்திமதிகள் சொன்னார். சொல்லும்போது சீஷன் என்ன செய்தான்? குரு சொன்ன சொற்களைக் கேளாமல் வீட்டின் முகட்டில் ஒரு எலி நுழைகிறதைப் பார்த்துக்கொண்டு இருந்தான்.

குரு புத்திமதி எல்லாம் சொல்லி முடித்த பின்பு சீஷனைப் பார்த்து 'அப்பா! எல்லாம் நுழைந்ததா?' என்று கேட்டார். சீஷன் 'சுவாமீ, எல்லாம் நுழைந்தது; வால் மாத்திரம் நுழைய இல்லை' என்றான். குரு அதைக் கேட்டுக் கோபம் கொண்டு, 'இவன் கவனம் இல்லாதவன். இவனுக்குப் புத்தி சொன்னாலும் பலன் இல்லை' என்று அவனைத் துரத்திவிட்டார்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
23 MAY 1914
MADRAS

பதினைந்தாம் பாடம்.

தேக உறுப்பு.

நமது தேகம் மிகவும் அருமையானது. அதைக் கடவுள் படைத்தார். அந்தத் தேகத்தின் பகுதிகளின் பெயர் என்ன? அவைகளுக்கு உறுப்பு என்று பெயர். நமது உடம்பிலே பல பகுதிகள் உண்டு. ஆதலால் உறுப்புக்களும் பலவாக இருக்கும். அந்த உறுப்புக்களின் பெயரையும் தொகையையும் அறிய வேண்டும். உடம்பில் முதல் உறுப்பு எது? தலை. கடைசி உறுப்பு எது? கால்.

தலை எத்தனை?
ஒன்று.
கால் எத்தனை?
இரண்டு.
நெற்றி எத்தனை?
ஒன்று.
கண் எத்தனை?
இரண்டு.
புருவம் எத்தனை?
இரண்டு.
மூக்கு எத்தனை?
ஒன்று.
காது எத்தனை?
இரண்டு.

வாய் எத்தனை?
ஒன்று.
கழுத்து எத்தனை?
ஒன்று.
உதடு எத்தனை?
இரண்டு.
கை எத்தனை?
இரண்டு.
கைவிரல்கள் எத்தனை?
பத்து.
கால்விரல்கள் எத்தனை?
பத்து.
வயிறு எத்தனை?
ஒன்று.

பதினாறாம் பாடம்.

உறுப்புக்களின் தொழில்.

தலை என்ன செய்யும்? தலை குனியும், பாரம் சுமக்கும்.
கண்கள் என்ன செய்யும்? கண்கள் உருவங்களைப் பார்க்கும்.
காது என்ன செய்யும்? காது சத்தம் கேட்கும்.
மூக்கு என்ன செய்யும்? மூக்கு மூச்சு விடும், வாசனை முகரும்.
வாய் என்ன செய்யும்? வாய் திறக்கும், மூடும்.
பற்கள் என்ன செய்யும்? பற்கள் உணவுகளைக் கடிக்கும்.
நாக்கு என்ன செய்யும்? நாக்கு சுவை அறியும், பேசும்.
கைகள் என்ன செய்யும்? கைகள் பொருள்களை வாங்கும், கொடுக்கும்.
கால்கள் என்ன செய்யும்? கால்கள் நிலத்தில் நிற்கும், நடக்கும், ஓடும்.

பதினேழாம் பாடம்.

காற்றாடி.

இந்தப் படத்தில் யார் நிற்கிறார்கள்? சில பிள்ளைகள் நிற்கிறார்கள். எத்தனை பேர்? நாலு பேர். எங்கே நிற்கிறார்கள்? வயல்வெளியில் நிற்கிறார்கள். என்ன செய்கிறார்கள்? விளையாடுகிறார்கள். எப்படி விளையாடுகிறார்கள்? காற்றாடி விடுகிறார்கள். காற்றாடிக்கு வேறே என்ன பெயர் உண்டு?

பட்டமென்று சொல்லுவார்கள். காற்ருடி எப்படிப் பறக்கும்? காற்றின் உதவியினலே மேலே

பறக்கும். காற்றில்லாவிட்டால் காற்றாடி பறக்குமா? பறக்க மாட்டாது. பள்ளிக்கூடம் இருக்கும்போது பிள்ளைகள் பட்டம் விடலாமா? விடலாகாது. பள்ளிக்கூடம் இல்லாத நேரத்தில் பிள்ளைகள் சந்தோஷமாய்க் காற்றாடி விட்டு விளையாடலாம்.

பதினெட்டாம் பாடம்.

குருடனும் விளக்கும்.

இரண்டு கண்ணும் தெரியாத குருடன் ஒருவன் இருந்தான். அவன் அதிக இருளான ஒரு இரவில் ஓர் இடம் போனான். போகும்போது என்ன கொண்டு போனான்? தோளிலே ஒரு பெரிய பானையும், தன் கையிலே ஒரு விளக்கும் கொண்டு போனான்.

கடைத் தெருவில் போனபோது ஜனங்கள் பார்த்தார்கள். அவர்கள் குருடனைப் பார்த்துச் சிரித்து, 'குருடா! உனக்கு இரவும் பகலும் ஒன்றுதானே. இந்த விளக்கை ஏன் கொண்டு போகிறாய்?' என்று கேட்டார்கள்.

அதைக் கேட்ட குருடன் சிரித்து 'சிநேகிதரே! விளக்குக் கொண்டு போகிறது எனக்காக அல்ல. உங்களை நினைத்தே கொண்டு வந்தேன். ஏன் என்றால், கண் உள்ள நீங்கள் இருட்டில் வருகிறீர்கள். தெரியாமல் நீங்கள் என்மேல் விழுந்து என் பானையை உடைத்து விடுவீர்கள். அப்படிச்

செய்யாமல் உங்களுக்கு எச்சரிக்கை செய்ய இந்த விளக்கை நான் கொண்டு போகிறேன்' என்முன். அதைக் கேட்ட ஜனங்கள் குருடன் புத்தியை மெச்சினுர்கள்.

பத்தொன்பதாம் பாடம்.

பசு.

பசு நாட்டில் இருக்கும் மிருகம். இந்தியாவிலும் இலங்கையிலும் பசு அதிகம். பசு பலவித நிறம் உள்ளது. பசு எல்லா மிருகங்களிலும் நல்ல குணம் உடையது. அதைப்போல் சாந்த குணமுள்ள மிருகம் வேறு ஒன்றும் இல்லை. பசுவுக்குக் கால்கள் நாலு, வால் ஒன்று, கொம்பு இரண்டு. வாலினுல் ஈக்களைத் துரத்தும். பசு தன்னை அடித்தவரைக் கொம்பினுலே குத்தும்.

பசுவுக்குப் பசி வந்தால் கதறும். புல்லு, வைக்கோல், தவிடு முதலானவைகளைத் தின்னும். பசு பால் தரும். அதின் பால் கறக்கிறவன் பெயர் இடையன். அவன் பின்கால் இரண்டையும் வாலையும் சேர்த்துக் கட்டிக் கறப்பான். பசுவின் பால் அதிக உருசி உள்ளது. அது எல்லாப் பால்களிலும் நல்லது. அதின் நிறம் வெள்ளை. அதைக் காய்ச்சிக் குடித்தால் அதிக பலம் உண்டாகும். பால் தயிர் ஆகும். தயிரைக் கடைந்தால் மோரும் வெண்ணெயும் ஆகும்.

பசு அறிவு உள்ள மிருகம். அது தீனி வைத்தால் அன்பாய் இருக்கும். தனக்குத் தீனி கொடுக்கிறவனைக் கண்டால் கதறும். பசு தன் கன்றுகளை அன்பாய் வளர்க்கும். பசுவின் ஆண் கன்றுக்குக் காளை என்று பெயர். பெண் கன்றுக்குக் கடாரி என்று பெயர். பசு அதிக பிரயோஜனம் உள்ளது.

இருபதாம் பாடம்.

கடன்.

ஒரு செலவாளி ஓர் ஊரில் உள்ள பணக்காரனைக் கடன் கேட்டான். பணக்காரன் 'உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?' என்றான். செலவாளி அதிக வணக்கத்துடன் 'ஐயா! எனக்கு நூறு ரூபாய் தாரும்' என்று சொன்னான். பணக்காரன் அவனைப் பார்த்து, 'தம்பீ! நான் கொடுத்தால் அந்தப் பணத்தைப் பிறகு எப்படிக் கொடுத்துத் தீர்ப்பாய்?' என்று கேட்டான்.

அதைக் கேட்ட செலவாளி 'ஐயா! எனக்கு வரும் சம்பளத்தில் மாதம் மாதம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்துக் கொடுப்பேன்' என்றான். அப்போது பணக்காரன் 'தம்பீ! இதற்கு முன் இப்படிப் பணம் சேர்க்கக்கூடாதா?' என்றான். செலவாளி 'ஐயா! இதுவரையிலும் தெரியாமல் இருந்துவிட்டேன்' என்று சொன்னான். அதற்குப் பணக்காரன் 'இனிமேல் அறிந்து

கொள்! நான் உனக்குக் கடன் கொடுக்கமாட்டேன்; போ' என்றான். கடன் கேட்ட செலவாளி வெட்கப்பட்டுப் போய் வரவுக்குத்தக்க செலவு செய்து, பணஞ் சேர்க்க ஆரம்பித்தான்.

இருபத்தோராம் பாடம்.

கால அளவு.

சூரியன் வெளிச்சம் கொடுக்குங் காலம் பகல்.
சூரிய வெளிச்சம் இல்லாத காலம் இரவு.
சூரியன் உதிக்கும் காலத்திற்குக் காலை என்று பெயர்.
சூரியன் தலைக்கு நேர் மேலேவரும் காலத்திற்கு மத்தியானம் என்று பெயர்.
சூரியன் மறைகிற காலத்திற்கு மாலை என்று பெயர்.
ஒரு பகல் பன்னிரண்டு மணி கொண்டது.
ஒரு இரவு பன்னிரண்டு மணி கொண்டது.
பகலும் இரவுஞ் சேர்ந்தது ஒரு நாள்.
ஏழு நாள் சேர்ந்தது ஒரு வாரம்.
அந்த ஏழு நாட்களுக்கும் முறையே ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று பெயர்.

நாலு வாரம் கொண்டது ஒரு மாதம்.
பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம்.
அந்தப் பன்னிரண்டு மாதங்கள் முறையே: சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்று சொல்லப்படும்.

இருபத்திரண்டாம் பாடம்.

வரிக் குதிரை.

இந்தப் படத்தில் நாம் என்ன பார்க்கிறோம்? இது குதிரை அல்லது புலி என்று சொல்லுவீர்கள். ஆனால் அப்படி அல்ல. இதின் சாயல் குதிரைபோலிருக்கிறது. தோல் புலியின் தோல் போல அநேக வரிகள் உள்ளதாய் இருக்கிறது. ஆகையால் சிலர் இதைப் புலிக்குதிரை என்று சொல்லுவார்கள். தோல் வெண்மையாயும் வரிகள் கறுப்பு நிறமாயும் இருக்கும். இந்த மிருகம் இந்தத் தேசத்திலே இல்லை. தூரதேசமாகிய தென் ஆபிரிக்காவிலே இருக்கும். இவைகள் கிராமங்கள் ஊர்களுக்குச் சமீபத்தில் வசிக்கிற



தில்லை. மனுஷர் காணப்படாத மலைகளில் சிறு கூட்டம் கூட்டமாய் வசிக்கின்றன. இவைகள் மனுஷருக்கு அதிகம் பயப்படும். இவைகள் மேயும்போது இரண்டு மூன்று காவலாய்ப் பார்த்துக்கொண்டு நிற்கும். சிங்கம் வந்தால் எல்லாம் ஓடிப்போகும். இவைகள் மிக மூர்க்கமுள்ள மிருகங்கள். ஆதலால் மனுஷர் இவைகளை வண்டியிற் கட்ட மாட்டார்கள். அல்லது இவைகளில் ஏறிச் சவாரி செய்யவும் மாட்டார்கள்.

இருபத்து மூன்றும் பாடம்.

மாமரம்.

இது என்ன மரம்? இது மாமரம். இது ஆற்றின் ஓரமாய் ஒரு சமபூமியில் நிற்கிறது. இதில் அநேக காய்களும் பழங்களும் இருக்கின்றன.

காய்க்கு மாங்காய் என்றும், பழத்துக்கு மாம் பழம் என்றும் பெயர். நல்ல நிழல் இருப்ப தால் இந்த மரத்தின் கீழ் அநேகர் உட்காரு வார்கள்.

ஒரு நாள் சில பிள்ளைகள் இந்த மரத்தின் சமீபத்தில் வந்தார்கள். அவர்கள் மரத்தில் இருந்த பழங்களைக் கண்டு அவைகளைத் தின்ன ஆசை கொண்டார்கள். ஆனால் பழங்கள், அந்தச் சிறுவர்கள் கைக்கு எட்டவில்லை. அதனால் அவர்கள் கல் எடுத்துப் பழங்கள் விழும்படி எறிந்தார்கள். அதற்கும் பழங்கள் கீழே விழ இல்லை. உடனே மரத்தின் மேல் ஏறிக் கிளைகளை மிதித்து அசைத்து உலுத்தினார்கள். பழங்கள் அநேகம் கீழே விழுந்தன. சிறுவர்கள் இறங்கி அந்தப் பழங்களை எடுத்துத் தின்றார்கள். இவைகளை மாமரம் பார்த்து அதிக வருத்தம் கொண்டது.

'ஐயோ! இந்தப் பழங்களை வைத்து இருந்ததனால் அல்லவா வருத்தப்படுகிறேன்? காய்க்காத மரத்தில் கல் எறி விழுமா? பழம் கொடுத்து உபகாரம் செய்யும் என்மேல் இரக்கம் இல்லாமல் இவர்கள் கல் எறிகிறார்கள். ஏறி மிதித்து அசைத்துக் குலுக்கி வருத்துகிறார்கள். நான் வெறு மரமாய் இருந்தால் இவ்வளவு பாடுபட மாட்டேன். சுகமாய் இருப்பேன்' என்று வருத்தப்பட்டது.

ஆயினும் தன் பழங்களைச் சிறுவர் தின்பது கண்டு வருத்தம் நீங்கி அதிக சந்தோஷம் கொண்டது.



இருபத்து நான்காம் பாடம்.

பூனை.

பூனை வீடுகளில் வசிக்கும். அது சிறிய புலி போலக் காணப்படும். அதனால் அதற்கு வீட்டுப் புலி என்று பெயர். பூனை பலவித நிறம் உள்ளது. அதின் மயிர் நமது கைக்கு மெதுவாய் இருக்கும். பூனைக்கு அதிக கூரான நகம் உண்டு. அந்த நகங்களால் அது மனிதரைப் பிறாண்டும். அதின் பல்லு மிகவும் கூர்மையாய் இருக்கும். பூனையை அடித்தால் அது கடிக்கும். கோபம் வந்தால் உறுமும். வழக்கமாய் அது சாந்தம் உள்ளது.

பூனை மரங்களிலும் சுவர்களிலும் ஏறும். ஏறுவதுபோல இறங்க முடியாது. ஆனபடியால் அது மேலே இருந்து கீழே குதிக்கும். பூனை அதிகமாய் மாமிசம் வெண்ணெய் தின்னும். ஆனால் பாலும் குடிக்கும். பூனைக்கு இரவில் கண் நன்றாய்த் தெரியும். எலிகள் வந்தால் அது பிடித்துக் கொல்லும். எலிகள் தானியம் முத

லான பொருள்களை அறுத்துத் தின்னும். பூனை இருந்தால் எலிகள் அவைகளைத் தின்ன முடியாது. அதற்காக அநேகர் பூனையை வீட்டில் வளர்க்கிறார்கள். பூனை இருக்கும் வீட்டில் எலி வரமாட்டாது.

பூனை தன் குட்டிகளைக் கத்திக் கத்தி அழைக்கும். அவைகளுடன் நன்றாய் விளையாடும். குட்டிகள் அங்கும் இங்கும் குதித்து ஓடித் திரியும். பூனை தன் குட்டிகளைப் பாதுகாக்கும். ஏதேனும் அபாயம் வந்தால் அது என்ன செய்யும்? பூனை தன் குட்டிகளை வாயிலே கௌவிக்கொண்டு வேறு இடம் போகும். பிள்ளையே! நீ பூனையை ஒருக்காலும் அடியாதே.

இருபத்தைந்தாம் பாடம்.

வியாபாரியும் குரங்குகளும்.

ஒரு ஊரிலே குல்லா விற்கிற மனிதன் ஒருவன் இருந்தான். அவன் பல ஊர்களுக்கும் போய்க் குல்லா விற்று வருவான். ஒரு தடவை அவன் குல்லா மூட்டையை எடுத்துக்கொண்டு காட்டு வழியே போனான். வெகு தூரம் நடந்து போய் ஒரு மர நிழலில் உட்கார்ந்தான். வழி நடந்த கஷ்டத்தால் அவனுக்கு அதிக தூக்கம் வந்தது. குல்லா மூட்டையை ஒரு இடத்தில் வைத்து விட்டுத் தூங்கினான்.

அப்போது அந்தக் காட்டில் இருந்த குரங்குகள் அவனைப் பார்த்தன. அவைகள் எல்

லாம் கீச்சிட்டுக் கூட்டமாய்க் கூடின. அவன் குல்லா மாட்டி இருப்பதுபோலத் தாங்களும் செய்ய விரும்பின. உடனே அவைகள் கீழே இறங்கி வந்து குல்லா மூட்டையைப் பிரித்துக் குல்லாவைத் தங்கள் தலையில் மாட்டிக்கொண்டு மரங்களில் ஏறி இருந்தன.

தூங்கின மனிதன் விழித்துக் குல்லா மூட்டையைக் காணமல் தேடினன். அங்கும் இங்கும் தேடி அலைந்தான். பிறகு அவன் மரங்களில் இருந்த குரங்குகளைப் பார்த்தான். அவைகள் தங்கள் தலையில் குல்லாவை மாட்டி இருந்தன. அதைப் பார்த்த வியாபாரி அதிக ஆச்சரியம் கொண்டான். 'என்னைப்போல இந்தக் குரங்குகளும் குல்லாவைப் போட்டுக்கொண்டன. இதற்கு ஒரு உபாயம் பண்ணுவேன்' என்று சொல்லிக்கொண்டு தன் தலையில் இருந்த குல்லாவைக் கழற்றிக் கீழே போட்டான்.

அதைக் கண்ட குரங்குகளும் தங்கள் குல்லாக் களைக் கீழே எறிந்தன. வியாபாரி சந்தோஷம் அடைந்து குல்லாக்களை எல்லாம் எடுத்தான். அவன் அவைகளை முன்போல மூட்டை கட்டிக் கொண்டு போனான்.

இருபத்தாறம் பாடம்.

பெரிய குரு ஒரு பிள்ளைக்குக் காட்டின இரக்கம்.

நமது வீட்டிலே ஒரு பிள்ளை வியாதியாய் இருந்தால் தாய் தகப்பன் அதை அன்பாய்ப் பார்க்கிறார்கள். பிள்ளை இறந்துபோனால் அவர் கள் என்ன செய்யக்கூடும்? அப்போது ஒரு

வர் வந்து அந்தப் பிள்ளைக்கு உயிர் கொடுத்தால் அவர் எவ்வளவு பெரியவராய் இருப்பார். அப்படியே ஒரு பெரியவர் ஒரு முறை செய்தார். அதைப்பற்றிச் சொல்லுவேன் கேளுங்கள்.

பெரிய குருவாகிய இயேசுகிறிஸ்துநாதர் இந்த உலகத்தில் இருந்தார். அவரைப் பார்க்கும்படியாக ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் வந்தார்கள். அவர்களுக்குள் யவீரு என்னும் ஒருவன் வந்தான். அவன் அவருடைய காலில் விழுந்து ஒரு தயவு செய்யும்படி கேட்டுக் கொண்டான். அவனுக்குப் பன்னிரண்டு வயதான ஒரு மகள் இருந்தாள். அவள் வியாதிப்பட்டுச் சாகக் கிடந்தாள். அவன் 'ஆண்டவரே, நீர் வந்து என் மகளைச் சுகப்படுத்த வேண்டும், மருந்தினால் ஒரு பிரயோஜனமும் இல்லை, உதவி செய்கிறவர்களும் இல்லை. நீர் வந்து அவளுக்கு ஆசீர்வாதம் கொடுத்தால் போதும். அப்போது அவள் சுகப்படுவாள்' என்றான்.

உடனே இயேசுநாதர் அவனுடைய வீட்டுக்குப் போகப் புறப்பட்டார். கொஞ்சத்தூரம் போன உடனே வீட்டிலிருந்து சிலர் வந்தார்கள். அவர்கள் 'பிள்ளை செத்துப்போனது, குருவானவருக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டாம்' என்றார்கள்.

இயேசுநாதர் தகப்பனைப் பார்த்து 'பயப்படாதே. என்னை நம்பு. பிள்ளைக்குச் சுகம் உண்டாகும்' என்றார். அவர் வீட்டிற்கு வந்த போது வீட்டார் எல்லாரும் அந்தப் பெண்ணுக்காக அழுதுகொண்டு இருக்கிறதைப் பார்த்தார்.

அப்பொழுது அவர் 'என் அழுகிறீர்கள்? அவள் சாகவில்லை. நித்திரையாய் இருக்கிறாள்' என்றார். ஆனால் அவர்கள் அவர் சொன்னதைக் கவனிக்கவே இல்லை. அவர் உள்ளே போய்ப் பிள்ளையினுடைய கையைப் பிடித்து 'சிறு பெண்ணே, எழுந்திரு' என்றார். அப்போது அவள் உயிர் அடைந்து எழுந்திருந்தாள்.

இந்த அற்புதத்தினால் பெரிய குருவாகிய கிறிஸ்துநாதர் பிள்ளைகளுக்குக் காட்டின பெரிய அன்பை நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

இருபத்தேழாம் பாடம்.

பயத்தினால் ஓநாயின் குணம் மாறினது

நாம் வீடுகளிலும் தெருக்களிலும் தினந்தோறும் நாய்களைப் பார்க்கிறோம். சில சமயத்தில் காடுகளில் நரிகளைப் பார்க்கிறோம். நாய் சாந்தகுணம் உள்ளது. வழக்கமாய் அது கடியாது. சிறு பிள்ளைகள் சமீபமாய்ப் போனால் சும்மா இருக்கும். நரி மிகவும் கபடம் உள்ளது. அது ஒரு ஆட்டுக்குட்டி தனிமையாய் நிற்கிறதைப் பார்த்தால் அதைப் பிடித்துக்கொண்டு போகும். ஆட்டுக்குட்டி மற்ற ஆடுகளோடு நின்றால் நரி கிட்டப் போகாது. நரி, மனுஷராவது மிருகங்களாவது தன்னைப் பார்க்காதபடி, பகல் முழுவதும் புதரில் மறைந்து இருக்கும். நாயைப்போலவும் நரியைப்போலவும் இருக்கிற மிருகம் என்ன? அது ஓநாய். நாயின் குணமாவது நரியின் குணமாவது அதற்கு இல்லை. அது நாயைப்போலச்

சாந்தமாய் இருக்கமாட்டாது. நரியைப்போல் பயந்ததும் அல்ல. அது துஷ்ட மிருகம். அது சில சமயத்தில் ஊருக்குள்ளே போய்த் தெருவில் விளையாடும் சிறு பிள்ளைகளில் ஒன்றைக் கௌவிக் கொண்டுபோகும். மனுஷர் அதைக் கண்டால் துப்பாக்கியினால் சுடுவார்கள்.

ஒரு சமயத்தில் மிகுந்த பயத்தினால் ஒரு ஓநாய் துஷ்டகுணம் மாறி சாந்தகுணம் உள்ளதாய் ஒரு மனுஷனுக்குப் பக்கத்தில் அவனைக் கடியாமல் இருந்தது.

ஒரு இராத்திரி ஒருவன் மலையுள்ள இடத்தில் வழி தெரியாமல் போனான். புயல் அதிகமாய் அடித்துப் பெருமழை பெய்தது. எங்கும் இருள் மூடிக்கொண்டிருந்தது. அப்போது அவன் என்ன செய்வான்? பாறை ஒன்றைக் கையால் தடவிப் பிடித்து அதிலே பொழுது விடியும் வரையும் உட்கார்ந்திருந்தான். அப்போது அவன் இருந்த இடத்துக்கு ஒரு மிருகம் வந்தது. அது இன்ன மிருகம் என்று அவனுக்குத் தெரியாது. அது இடி முழக்கத்தினால் பயந்து நடுநடுங்கி அவன் இருந்த பாறையிலே வந்து உட்கார்ந்திருந்தது. குளிர் அதிகமான படியினால் மனுஷனோடு நெருங்கி இருந்தது. பொழுது விடிந்தபோது தன்னோடுகூட இருந்தது ஓநாய் என்று அந்த மனுஷன் கண்டான். ஓநாய் அவனைப் பார்த்த உடனே ஓடிவிட்டது. அப்போது அந்த மனுஷன் ஓநாயின் குணத்தை மாற்றி, இராமுழுதும் தன்னைக் காத்தகடவுளுக்கு ஸ்தோத்திரம் செலுத்தித் தன் வழியே போனான்.

இருபத்தெட்டாம் பாடம்.

ஔவையும் ஒரு மனிதனும்

ஒரு நாள் அதிக வயசு உள்ள ஔவை என்னும் கிழவி வெளியில் புறப்பட்டுப் போனாள். போகும்போது வழி நடந்த கஷ்டத்தால் ஓர் இடத்தில் உட்கார்ந்தாள். கோவில் ஒன்று எதிரே இருந்தது. ஔவை கோவிலுக்கு நேராய்க் கால்களை நீட்டிக்கொண்டு உட்கார்ந்ததை ஒரு மனிதன் கண்டான். அந்த மனிதன் ஓடி வந்து 'அம்மா! சுவாமி இருக்கும் கோவிலுக்கு நேராய்க் கால்களை நீட்டிக்கொண்டு இருக்கலாமா?' என்று கேட்டான்.

அதைக்கேட்ட ஔவை என்னும் கிழவி. 'ஐயா! சுவாமி இல்லாத இடத்தைச் சொன்னால் அந்த இடத்திற்கு நேராய்க் கால்களை நீட்டிக் கொண்டு இருப்பேன்' என்று சொன்னாள். அவன் அதற்கு ஒன்றும் சொல்லத் தெரியாமல் நின்றான். இந்தக் கதையினால் நாம் என்ன அறிகிறோம்? கடவுளின் தன்மையை அறிகிறோம்.

கடவுள் எங்கும் இருக்கிறார். அவர் இல்லாத இடம் கிடையாது. கடவுளை நாம் இந்தக் கண்களால் பார்க்க முடியாது. அவர் நம்மையும், சூரியன், சந்திரன், பூமி, கடல் முதலான எல்லாப் பொருள்களையும் படைத்தார். அவரால் எல்லாம் ஆகும். அவர் செய்யக் கூடாதது ஒன்றும் இல்லை. அவர் எல்லாம் அறிவார். அவர் அறியாதது ஒன்றும் இல்லை.



இருபத்தொன்பதாம் பாடம்.

நல்ல பையனும் கெட்ட பையனும்

இந்தப் படத்தில் என்ன பார்க்கிறீர்கள்? இரண்டு சிறுவரும் அவர்கள் தகப்பனும் நிற்கிறார்கள். இந்தச் சிறுவரில் ஒருவன் பேர் தாசன், மற்றவன் பேர் ராஜா. தாசன் தன் பாடங்களை நன்றாய்ப் படித்ததினால் சந்தோஷமாய் நிற்கிறதைப் பார்க்கிறோம். பள்ளிக்கூடத்திற்குப் போகிறதற்கு முந்தி, பிள்ளைகள் பாடங்களைப் படிக்கவேண்டும் அல்லவா? ராஜனோ, அப்படிப் படியாததினால் தகப்பன் அவனைக் கண்டித்து 'நீ கெட்ட பையன்' என்று சொல்லுகிறான். அப்போது தாசன் தகப்பனைப் பார்த்து 'நல்ல பையன் யார்? கெட்ட பையன் யார்?' என்று கேட்டான். தகப்பன் சொன்னதாவது:—

பாடம் படித்து ஒப்புவிக்கும் பையன் நல்ல பையன்.

பாடம் படிக்காதவனும் ஒப்புவிக்காதவனும் கெட்ட பையன்.

உபாத்தியாயருக்கு அடங்கி நடக்கும் பையன் நல்ல பையன்.

உபாத்தியாயருக்கு அடங்கி நடவாத பையன் கெட்ட பையன்.

புத்தகம் கிழிக்காத பையன் நல்ல பையன்.

புத்தகம் கிழிக்கும் பையன் கெட்ட பையன்.

கற்பலகை உடைக்காத பையன் நல்ல பையன்.

கற்பலகை உடைக்கும் பையன் கெட்ட பையன்.

புத்தகங்களில் கிறுக்கி விளையாடாத பையன் நல்ல பையன்.

புத்தகங்களில் கிறுக்கி விளையாடும் பையன் கெட்ட பையன்.

பிள்ளைகளுடன் சண்டை செய்யாத பையன் நல்ல பையன்.

பிள்ளைகளுடன் சண்டை செய்யும் பையன் கெட்ட பையன்.

மெய் பேசுகிற பையன் நல்ல பையன்.

பொய் பேசுகிற பையன் கெட்ட பையன்.

கடவுளை வணங்கும் பையன் நல்ல பையன்.

கடவுளை வணங்காத பையன் கெட்ட பையன்.

முப்பதாம் பாடம்.

சூரியனும் காற்றும் மழையும்

சூரியன் வெயில் எரித்தது. காற்றும் மெது மெதுவாய் அசைந்து வீசினது. அந்த வேளை மழையும் பெய்யத் தொடங்கினது. சூரியன் காற்று மழை என்கிற மூன்றுக்கும் ஒரு சச்சரவு தொடங்கிற்று. என்ன என்றால், சூரியன் காற்றையும் மழையையும் பார்த்து 'உங்களைப்பார்க்கிலும் நானே பலவான்' என்றது. காற்று 'நானே அதிக சூரன்' என, மழையோ 'உங்கள் இருவரிலும் நானே மகா வீரன்' என்றது.

இப்படி ஒன்றுடன் ஒன்று பேசின. கடைசியில் அவ்வை, 'இதோ போகிற மனிதன் போர்த்திருக்கிற சால்வையை எடுக்கும்படி எது செய்யுமோ அது தான் பலம் உள்ளது' என்று தீர்மானம் செய்தன. இதற்கு மூன்றும் சம்மதித்துக்கொண்டன. உடனே மின்னி முழங்கி மழை பெய்தது. வழியே போன அந்த மனிதன் மழை வருவதைக் கண்டான். உடனே அவன் தன்மேல் இருந்த சால்வையை விரித்துப்போர்த்துக்கொண்டுபோனான்.

காற்று 'இதுதான் சமயம்' என்று அந்த மனிதனுடைய சால்வை கீழே விழும்படி உரத்து வீசினது. காற்று அதிக பலமாய் வீசுவதைக் கண்ட அவன் என்ன செய்தான்? தன்மேல் இருந்த சால்வை விலகாதபடி நன்றாய் இறுக்கிப் போர்த்தான். மழையும் காற்றும் தங்களால்

ஆனமட்டும் பார்த்தும் அவனுடைய சால்வை யை எடுக்க முடியவில்லை.

இப்படி அந்த மனிதன் மழையும் காற்றும் தன் மேலே படாதபடி சால்வையை இறுக்கி மூடுவதைச் சூரியன் பார்த்து, வெயில் அதிகம் எரிக்கச் செய்தது. உடனே அந்த மனிதன் சால் வையை எடுத்தான். அது ஈரமாய் இருந்தபடி யால் உலரும்படி தன் கையில் பிடித்துக்கொண்டு போனான். 'சூரியனுடைய வெயிலினால் அவன் சால்வையை எடுத்தான். எங்களிலும் சூரியன் பலம் உள்ளது' என்று மழையும் காற்றும் பேசிப் போயின.

முப்பத்தோராம் பாடம்.

தாய்

பிள்ளையே! உன்னைப் பெற்றவள் யார்? அவள் உன் தாய். நீ சிறு குழந்தையாய் இருந்தபோது அவள் அன்புடன் உன்னைக் காப்பாற்றினாள். அவள் உனக்குப் பால் ஊட்டினாள். தான் தூங் காமல் உன்னைத் தூங்கவைத்தாள். சிறிதுநேரம் உன்னை விட்டுப் போனால் நீ வீரிட்டு அழுதாய். அந்த அழுகையைக் கேட்டு எங்கே நின்றாலும் அவள் ஓடி வந்து பால் கொடுத்தாள்.

உனக்கு மோசம் வராதபடி உன்னுடன் கூட இருந்தாள். இரவும் பகலும் உன்னைத் தூக்கிச் சுமந்தாள். உனக்கு நோய் வந்தால் மருந்து ஊட்டி உன்னைச் சுகப்படுத்துவாள்.

மழை இல்லாத பயிர் வளருமா? வளராது. அது போலத் தாய் இல்லாத பிள்ளையும் வளருதல் அருமை.

உன் தாய்போல உன் இடத்தில் அன்பு வைப்பவர் யார்? உன் தாயார் தன் ஜீவியகாலம் முழுதும் உனக்கு வேண்டியவைகளைச் செய்து வளர்க்கிறாள். ஆதலால் அவளுக்கு நீ செய்யுங் கடமைகளை மறவாமற் செய். பிள்ளையே! தாயை ஒரு காலமும் மறவாதே. அவள் கஷ்டப்படப் பார்த்துக்கொண்டு இருக்காதே. நீ இந்தப் பூமி முழுதையுங் கொடுத்தாலும் அருள் காட்டின அன்புக்குச் சமானம் ஆகாது. ஆதலால் தாயை நினைத்து ஆதரிக்கவேண்டும். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று ஔவையாருஞ் சொன்னார்.

முப்பத்திரண்டாம் பாடம்.

இரண்டு நாய்கள்

ஒரு கிராமத்தில் இரண்டு நாய்கள் இருந்தன. ஒரு நாய்க்கு மூர்க்கன் என்று பெயர். மற்ற நாய்க்குச் சாந்தன் என்று பெயர். மூர்க்கன் என்ற நாய் துஷ்ட குணம் உள்ள நாய், கடிக்கிற நாய். சாந்தன் என்ற நாய் நல்ல குணம் உள்ள நாய், அடக்கமான நாய்.

இந்த இரண்டு நாயும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் எங்குந் திரிந்தன. ஒருநாள் இரண்டு



நாயும் அயல் ஊருக்குப் போயின. அங்கே இருந்த நாய்கள் இந்த நாய்களைப் பார்த்தன. இவை அயல் கிராமத்தில் இருக்கும் நாய்கள் என்று தெரிந்தன. உடனே அந்த ஊர் நாய்கள் எல்லாம் கூடிக் குரைத்துக்கொண்டு ஓடிவந்தன.

மூர்க்கன் என்ற நாய் என்ன செய்தது? அந்த ஊர் நாய்களைப் பார்த்துப் பயப்படாமல் அதிக கோபங்கொண்டது. தலையை மேலே நிமிர்த்தி மண்ணைப் பிறாண்டினது. தன் கிட்டவந்த ஒரு நாயைக் கடிக்கப்போனது. அப்போது அந்த ஊர் நாய்கள் எல்லாம் மூர்க்கன் நாயைக் கடித்துத் துரத்தின.

சாந்தன் என்ற நாய் என்ன செய்தது? குரைத்துக்கொண்டு வந்த அந்த நாய்களைக் கண்டு பயந்தது. தன் வாலை மடக்கிக் காதுகளை மடித்து உடம்பை ஒடுக்கி அமைதிக்குணம் காட்டினது. சாந்தன் என்ற நாய் எவ்வளவோ அடக்கமான குணங் காட்டியும் அந்த ஊர் நாய்கள் அதையுங் கடித்தன. துஷ்ட நாயோடு கூடின நல்ல நாயும் கஷ்டப்பட்டது.



முப்பத்து மூன்றும் பாடம்.

முயலும் ஆமையும்

ஒரு குளத்தில் ஆமை ஒன்று இருந்தது. அந்தக் குளத்தில் ஜலம் வற்றினது. அதனால் அது வேறு இடத்திற்குப் போக நினைத்தது. ஆமை மெது மெதுவாய் நகர்ந்து போனது. அதை ஒரு முயல் பார்த்துச் சிரித்தது. ஆமை சமீபமாய் வந்ததும் முயல் சொன்னதாவது:—

'ஆமையே! உன்னைப்போல மந்த நடையுள்ள பிராணியை நான் காண இல்லை. நீயும் ஒரு பிராணியா?' என்று இழிவாய்ப் பேசினது. அதை ஆமை கேட்டு 'ஐயா, முயலே! நீ அதிக வேகமாய் ஓடுகிறவன்தான். ஆயினும் பந்தயம் வைத்து ஒரு இடம் போவோம். அந்த இடத்திற்கு முந்திப் போகிறவர் யார் பார்ப்போம்?' என்றது. முயலும் அதற்கு ஒத்துக்கொண்டது. ஒரு இடத்தை ஏற்படுத்தி இரண்டும் போகத் தொடங்கின.



முயல் வெகு விரைவாகச் சிறிது தூரம் ஓடி வந்து பார்த்தது. ஆமையைக் காண இல்லை. 'நான் ஏன் விசையாய் ஓடவேண்டும்? ஆமை முயலுக்கு முந்திப் போகும் என்று எவனும் சொல்லமாட்டான். இங்கே சிறிது காலம் நித்திரை செய்து போகலாம்' என்று தூங்கினது. இப்படியே முயல் ஓடுவதும் தூங்குவதுமாய் இருந்தது. ஒருதரம் ஆமையானது முயல் எழும்புமுன் மெதுவாய் நகர்ந்துபோய் அந்த இடத்தைச் சேர்ந்தது. முயல் தூங்கி எழுந்து

அதிக விரைவாக ஓடி வந்தது. தனக்குமுன் ஆமை இருக்கக் கண்டு வெட்கப்பட்டது.

'நின்று நின்று ஓடுகிறவனிலும் நிற்காமல் நடக்கிறவனே வேகமானவன்' என்னும் பழமொழி ஆமையால் உண்மையானது.

முப்பத்து நான்காம் பாடம்.

பிராணியும் புஷ்பச்செடியும்

ஒரு புதிய தேசத்தைக் கண்டுபிடிக்க ஒருவன் போனான். அவனோடு துணையாக அநேக ஆட்கள் போனார்கள். ஐந்து ஆறு மாதம் ஆகியும் தேடிப்போன தேசம் அகப்படவில்லை. துணையாய்ப்போன ஆட்கள் சிலர் இறந்தார்கள். சிலர் பயம் கொண்டு 'நாங்கள் இனி வரமாட்டோம்' என்று ஊருக்குத் திரும்பி வந்தார்கள். அவனோ தைரியத்துடன் தனியே போனான். போகும்போது அவன் அதிக பயங்கரமான ஒரு காட்டிற் சென்றான்.

அங்கே மரம் செடிகள் இல்லாமல் வெயிலால் அதிக அவஸ்தைப்பட்டான். தாகத்திற்கு ஜலமும் கிடையாது. மிருகம் பட்சி முதலான ஜெந்துக்களும் புல் பூண்டுகளும் இல்லை. அப்படிப்பட்ட பயங்கரமான காட்டில் நடந்து போனான். போகும்போது ஆகாரம் இல்லாமல் அதிகம் இளைத்து கீழே விழுந்தான். சிறிது நேரம் கழிந்தபிறகு 'கடவுளே, என்ன செய்வேன்? தேவரீர் அல்லாமல் வேறு ஒருவரும்

எனக்குத் துணை இல்லை. இனி நான் இறந்துபோவேன். இப்போது எனக்குக் கிருபை செய்யும்' என்று பிரார்த்தித்தான்.

அப்போது அவன் அங்கே மணலில் ஒரு சிறு செடி நிற்பதைப் பார்த்தான். அதில் இரண்டு மூன்று கறுப்புப் பூக்கள் இருந்தன. அவைகளை அவன் பார்த்து 'ஆ! ஆ! என்ன ஆச்சரியம். கொஞ்சமும் ஜலம் இல்லாத இந்த இடத்தில் செடி பூத்திருக்கிறது. இந்தச் செடிக்குப் பனி பெய்வித்துப் புஷ்பம் உண்டாக்கினவர் கடவுள் அல்லவா? அவர் எனக்கும் துணை செய்வார்' என்று அவன் திடங்கொண்டு போனான். சிறிது தூரம் போனபின் ஒரு குளம் இருக்கக் கண்டான். அதில் ஜலம் குடித்து ஆயாசம் தீர்ந்து தேடிப்போன தேசத்தைப் போய்க் கண்டுபிடித்தான். ஆதலால் கடவுளின்மேல் நம்பிக்கை உள்ளவன் பாக்கியவான் ஆவான்.

முப்பத்தைந்தாம் பாடம்.

பெரிய குருவும் பிள்ளைகளும்

பெரிய குருவாகிய இயேசுகிறிஸ்து சிறு பிள்ளைகளை நேசிக்கிறாரா? ஆம், நேசிக்கிறார். அது எப்படித் தெரியும்? அவர் இந்த உலகத்தில் இருந்து பிள்ளைகளுக்கு நல்ல நேசம் காட்டினார். எப்படி என்றால், கேளுங்கள்.

இந்தப் பெரிய குருவாகிய இயேசுகிறிஸ்து ஒரு ஊரில் இருந்தார். அங்கே அநேக ஜனங்

கள் கூட்டம் கூட்டமாய்க் கூடிவந்து அவரை வணங்கினார்கள். அப்போது சில தாய்மார் சிறு பிள்ளைகளை எடுத்துக்கொண்டு அவரைத் தேடி வந்தார்கள். ஏன் வந்தார்கள்? சற்குருவான இயேசுவின் ஆசிர்வாதம் தங்கள் பிள்ளைகளுக்குக் கிடைக்கவேண்டும் என்று நினைத்து வந்தார்கள். எண்ண முடியாத ஜனங்கள் அவரைச் சுற்றி இருந்ததினால் பெண்கள் போகக் கூடாமல் இருந்தது.

அந்த ஜனங்கள் ஒருவர் ஒருவராய் இயேசு கிறிஸ்து நாதரை வணங்கி, உத்தரவு பெற்றுக் கொண்டு போனார்கள். ஜனக்கூட்டம் குறைந்ததைக் கண்ட பெண்கள் சமீபமாய்ப் போகத் தொடங்கினார்கள்.

இயேசு கிறிஸ்து நாதரின் சீஷர்கள் அதைப் பார்த்து 'தாய்மாரே! இப்போது நீங்கள்

போகக் கூடாது. எங்கள் சற்குருவைத் தொந்தரவு செய்ய வேண்டாம். பிள்ளைகளைக் காட்டாமல் அவைகளை எடுத்துக்கொண்டு உங்கள் வீடுகளுக்குப் போங்கள்' என்று தடுத்துத் துரத்தினார்கள்.

ஐயோ! பெண்கள் என்ன செய்வார்கள்? ஒன்றும் பேசாமல் அதிக துக்கமாய் நின்றார்கள். குரு சீஷர்கள் தடுப்பதை அறிந்தார். உடனே அவர் சீஷர்களை அழைத்து 'சிறு பிள்ளைகள் என் இடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள். அவைகளைத் தடை பண்ணாதிருங்கள்' என்று சொன்னார்.

அப்பொழுது பெண்கள் தங்கள் பிள்ளைகளுடன் போய் இயேசுநாதரை வணங்கினார்கள். அவர் அதிக சந்தோஷம் கொண்டு அந்தப் பிள்ளைகளின் உச்சியைத் தடவி ஆசீர்வாதம் கொடுத்து அனுப்பினார்.

முப்பத்தாறும் பாடம்.

பூனையும் பையனும்

ஒரு கிராமத்திலே அநேக வீடுகள் இருந்தன. அந்தக் கிராம மணியகாரனுடைய வீடு மற்ற வீடுகளைப்பார்க்கிலும் பெரிதாய் இருந்தது. அந்த மணியகாரனுக்கு ஒரு மகன் இருந்தான். அந்தப் பையன் விளையாடும்போது ஒரு பூனைக்குட்டி வந்தது. அது சிலநாள்

இரை இல்லாமல் பசியாய் இருந்தது. அவன் அதைப் பார்த்தபோது விளையாட்டுக்கு அதன் மேல் கல் எறிந்தானா? இல்லை. அந்தப் பூனைக் குட்டி பயந்து பயந்து மெள்ள மெள்ள வந்தது பையன் அதற்குப் பயம் காட்டாமல் கூப்பிட்டான். பூனைக்குட்டிக்குப் பால் மிகவும் பிரியம் அல்லவா? அவன் இதை அறிந்து வீட்டுக்குப் போய்க் கொஞ்சம் பால் கொண்டுவந்து பூனைக் குட்டிக்கு முன்பாக வைத்தான். உடனே அது வைத்த பால் முழுவதையும் குடித்தது. அந்தப் பையன் 'ஐயோ, இந்தப் பூனைக்குட்டிக்கு எவ்வளவோ பசி இருக்கிறது' என்று சொல்லி இன்னும் கொஞ்சம் பால் கொண்டுவந்து வைத்தான். பூனைக்குட்டி அதையும் குடித்தது. பின்பு அதற்குப் பசி தீர்ந்து சந்தோஷத்தினால் அங்கும் இங்கும் துள்ளி விளையாடினது. பையன் வீட்டுத் திண்ணையிலே இருந்து சிறு கயிறு ஒன்றை எடுத்து அதை நிலத்திலேபடச் சுற்றினான். பூனைக்குட்டி

தாவித் தாவி அதைப் பிடித்து விளையாடினது. அந்த நாள்முதல் அது மணியகாரன் வீட்டிலே தங்கினது.

முப்பத்தேழாம் பாடம்.

ஓடிப்போன பூனைக்குட்டி

மணியகாரனுடைய மகன் தன் வீட்டுக்கு வந்த பூனைக்குட்டியை அநேக நாள் வளர்த்து வந்தான். அங்கே அது ஒருநாளும் பசியாய் இருக்கவில்லை. அது இரவு பகல் முழுவதும் அந்த வீட்டுக்குள்ளே திரியும். சில நேரம் வீட்டுத் தலைவாசலில் இருக்கும். சில சமயத்தில் நெல்லுப் போட்டிருக்கும் களஞ்சியத்தில் தங்கும். கீழே ஓடி உலாவித் திரிவதும் அல்லாமல்

மேலே மேசை, ஜன்னல் இவைகளில் பாயப் பிரயாசப்படும். சில வேளைகளில் சமையல் அறைக்குப்போகும். ஆனால் பையனுடைய தாய் அதை அங்கே விடாமல் துரத்துவாள். ஒருநாள் காலமே அவளுக்குத் தெரியாமல் அந்தப் பூனைக் குட்டி சமையல் அறைக்குள் போனது. அங்கே மேலே ஒரு பரண் இருந்தது. அந்தப் பூனைக் குட்டி பரண்மேல் பாய்ந்து அங்கே வெண்ணெய் இருந்த ஜாடி ஒன்றைக் கண்டது. அதில் வெண்ணெய் திருட அதன்மேல் மெள்ள ஏறினது. உடனே ஜாடி உருண்டு கீழே விழுந்தது ஜாடி விழுந்த சத்தம் கேட்டுப் பையனுடைய தாய் ஓடிவந்தாள். அந்தப் பூனை அவள் வருகிறதைக் கண்டு தோட்டத்திற்குள் விழுந்து ஓடினது. அப்போது பையன் திண்ணையிலே உட்கார்ந்து இருந்தான். பூனை தோட்டத்திற்குள் போகிறதை அவன் பார்த்து அதைப் பிடிக்க ஓடினான். ஆனால் அது அவனுக்கு முந்தி ஓடி எங்கேயோ செடிகளுக்குள் மறைந்துகொண்டது. அவன் அதை அங்கும் இங்கும் தேடிப் பார்த்தும் அது அகப்படவில்லை. 'என் பூனை ஓடிப்போய்விட்டது' என்று சொல்லிக்கொண்டு வீசனப்பட்டு வீட்டுக்கு வந்தான்.

முப்பத்தேட்டாம் பாடம்

பூனை தோட்டத்தில் திரிந்தது

மணியகாரனுடைய வீட்டை விட்டு அந்தப் பூனை தோட்டத்தில் இருந்தது. அங்கே



அணில் மரங்களில் தத்தித் தத்தித் திரிந்தது. பூனை அந்த அணிலைப் பார்த்து அதைப் பிடிக்கப் பிரயாசப்பட்டது. அணில் பூனையைப் பார்த்துப் பயந்து மரக்கொம்பின் உச்சியில் ஏறிப்போனது. பூனை அங்கே போகமுடியாமல் நின்றது. அணில் அப்போது கீச்சுக் கீச்சு என்று கத்திக்கொண்டு இருந்தது. பிற்பாடு மரக்கிளைகளில் பச்சைக்கிளி ஒன்று பறந்து வந்து இருந்தது. பூனை அந்தப் பட்சியைப் பார்த்து அதைப் பிடிக்கப் போனது. கிளியோ பூனை சமீபமாய் வரும் வரைக்கும் இருந்து அது தன்னைப் பிடிக்கப் பாயும்போது பறந்துபோனது. பிறகு பூனை மரத்தில் இருந்து இறங்கிவந்து பாறையான ஓர் இடத்துக்குப் போனது. அந்தப் பாறையில் வெடிப்புக்கள் சில இருந்தன. அந்த இடத்துக்குக் கீழே பள்ளம் ஒன்று இருந்தது. அதில் ஒரு வளை இருந்தது. அந்த வளையின் வாசலில் நீளமான வால் உள்ள ஒரு எலி இருந்தது. பூனை 'ஒ, ஒ! இந்த எலியைப் பிடிப்பேன்' என்று நினைத்து அந்தப்பள்ளத்தில் இறங்கினது.

TB 031(1) N14
85151

எலி அதைப் பார்த்து தன் வளைக்குள்ளே புகுந்து கொண்டது. பூனை வாசலுக்கு வந்து அதற் குள்ளே தன் தலையை நுழைக்கப் பார்த்தும் முடியவில்லை. எலி வளையின் வாசலில் பூனை யின் தலையையும் அதின் சிவந்த கண்களையும் பார்த்து நடுநடுங்கினது. பூனை அதைப் பார்த்து 'எலி பயப்படுகிறது. அது இனி வெளியே வராது, அதைப் பிடிக்க முடியாது. இங்கே நான் நிற்பது வீண்' என்று சொல்லிக்கொண்டு அதை விட்டுப் போனது.

பூனை எலியை விட்டுப் போகும்போது மாலை நேரம் ஆயிற்று. காலைதொடங்கி மாலைவரைக்கும் அதற்கு இரை ஒன்றும் இல்லாமல் பசி அதிகம் உண்டானது. 'பசிக்கு இந்தத் தோட்டத்தில் பால் கிடையாது. பால் வேண்டுமானால் நான் மறுபடியும் மணியகாரன் மகன் வீட்டுக்குப் போகவேண்டும்' என்று அந்தத் தோட்டத்தை விட்டு அங்கே போனது. ஆனால் அது உடனே போகவில்லை. வீட்டைச் சுற்றிச் சுற்றித் திரிந்தது. அப்பொழுது பையன் திண்ணை யிலே நின்றான். அவன் 'என் பூனை மறுபடி யும் வருமோ' என்று சொல்லும்போது அது வந்தது. அவன் அதைப் பார்த்து தூக்கிக் கொண்டுபோய் முன்போல வளர்த்தான்.

முப்பத்தொன்பதாம் பாடம்

பூனையும் எலியும்

மணியகாரன் வீட்டிற்குப் பூனைக்குட்டி வந்த பிற்பாடு மறுபடியும் அவருடைய மகன் அதற்குப்



பால் வைத்துவந்தான். பூனைக்குட்டி இதைக் கண்டு ‘இவன் நல்ல பையன். நான் நெய் வெண்ணெய் திருடினால் வீட்டில் என்னை வைக்கமாட்டார்கள். நான் நல்ல பூனையாய் இருந்தால் இந்தப் பையன் என்னை எப்பொழுதும் நேசிப்பான்’ என்று அறிந்துகொண்டது. அந்த நாள் முதல் அந்தப் பூனை ஒன்றும் திருடாமல் அந்த வீட்டிலே இருந்தது.

ஒருநாள் மணியகாரனுடைய மகன் தன் பாட்டனார் வீட்டிற்குப் போனான். பாட்டனார் அவனைப் பார்க்கப் பிரியமாய் இருந்தார். அவன் சில நாள் பாட்டனார் வீட்டில் தங்கினான். பிற்பாடு பையன் தகப்பனார் வீட்டிற்குப் புறப்படும்போது பாட்டனார் அவனுக்கு ஒரு பட்டுவஸ்திரம் இனாம் கொடுத்தார். அவனுடைய பாட்டியும் பலகாரம் முதலிய தின்பண்டங்கள் கொடுத்தாள். பையன் அவைகளைக் கொண்டுவந்து ஒரு பெட்டிக்குள்

வைத்தான். அந்தப் பெட்டிக்கு மேல்மூடி ஒன்று இருந்தது. அவன் ராத்திரி படுக்கப் போகும் போது பெட்டியின் மூடியைத் திறந்து அதைப் பக்கத்தில் வைத்தான். பிற்பாடு பெட்டியில் இருந்த பலகாரத்தில் சிலவற்றை எடுத்துச் சாப் பிட்டான். அவன் மறுபடியும் பெட்டியின்மேல் மூடியை வைக்க மறந்துபோய்ப் படுத்துத் தூங்கி ஞன். அந்தப் பெட்டி அவனுக்குப் பக்கத்தில் ஒரு திண்ணையில் இருந்தது. பையனும் அந்த வீட்டில் உள்ள எல்லாரும் தூங்கும்போது ஒரு எலி பெட்டி இருந்த திண்ணைக்கு வந்தது. அந்த எலி வீட்டிலே பூனை இருக்கிறது என்று அறியா



மல் பலகார வாசனையை மோந்து மோந்து பெட்டிக்குக் கிட்ட வந்தது. பிற்பாடு அது அந் தப் பெட்டியின்மேல் பாய்ந்து அதற்குள் பலகா ரம் இருக்கிறதைக் கண்டது. உடனே அது பலகாரத்தைத் தின்னத் தொடங்கினது. பையன் பெட்டியில் சத்தம் உண்டாவதைக் கேட்டு விழித் தான். அந்த நேரத்தில் பூனையும் திண்ணைக்கு வந்தது. அப்போது பூனை பெட்டியில் உண் டான சத்தம் கேட்டு பெட்டிக்குச் சமீபமாய் வந் தது: அங்கே அது எலியின் வாலைப் பார்த்தது.

பூனை இதைக் கண்டு எலியைப் பிடிக்கப் பெட்டிக்குள்ளே பாய்ந்தது. அப்போது எலி கீழே குதித்து அறைக்குள்ளே ஓடினது. பூனையும் அதைத் தொடர்ந்து போனது. கடைசியில் எலி அறையின் ஒரு மூலையில் அடுக்கியிருந்த பானை சட்டிகளுக்கு இடையில் போய் நுழைந்தது. அப்போது பூனை கிழக்குப் பக்கமாய்ப் போய் அதைத் தேடினது. எலி மேற்குப் பக்கமாய்த் திரும்பி, தப்பி ஓடினது. அந்த நாள் முதல் எலி பூனைக்குப் பயந்து வீட்டிற்கு வரவில்லை.

நாற்பதாம் பாடம்.

சுந்தரமும் பரதேசியும்

ஒருநாள் சுந்தரம் என்னும் ஓர் பையன் புத்தகம் சிலேட்டுப் பலகை இவைகளை எடுத்துக்

கொண்டு பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டான். அவன் போகும்போது வழியில் ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்து இருந்த ஒரு பரதேசியைக் கண்டான். சுந்தரம் இந்தப் பரதேசியை முன்னே பார்க்கவில்லை. பரதேசி பையனைப் பார்த்து 'பிள்ளையே! எங்கே போகிறாய்?' என்று கேட்டான்.

சுந்தரம்:—நான் பள்ளிக்கூடத்திற்குப் போகிறேன்.

பரதேசி:—பள்ளிக்கூடத்திலே நீ என்ன படிக்கிறாய்?

சுந்.—போன வருஷம் நான் பால பாடம் படித்தேன். இந்த வருஷம் முதலாம் வாசக புத்தகம் படிக்கிறேன். கணக்குச் செய்கிறேன். வாய்பாடு சொல்லுகிறேன்.

பர.—பள்ளிக்கூடத்தில் உபாத்திமார் கடவுளைப்பற்றிச் சொல்லுவார்களா?

சுந்.—ஆம் ஐயா, கடவுள் நல்லவர். நான் நல்ல பையனாக இருந்தால் அவர் என்னை நேசிப்பார். நான் தீமை செய்யப்படாது. கடவுள் தீமையை வெறுக்கிறார்.

பர.—ஒரு சிறு பையன் பொய் பேசலாமா?

சுந்.—பொய் சொல்லுகிறது தப்பிதம்.

பர.—நாம் எப்பொழுதும் உண்மை பேச வேண்டுமா?

சுந்.—ஆம் ஐயா, நாம் எப்பொழுதும் உண்மை பேசவேண்டும்.

பர.—ஒரு பையன் தனது தாயார் வைத்த பலகாரத்தைத் திருடினல் அது குற்றமா? •

சுந்.—ஆம் ஐயா, அதுவும் குற்றம்தான். ஒருவன் களவாய் ரூபாய் எடுத்தாலும் பலகாரம் எடுத்தாலும் இரண்டும் திருட்டுத்தான்.

இப்படி அவர்கள் பேசிக் கடைசியில் பரதேசி சுந்தரத்தைப் பார்த்து 'நீ நன்ருய்ச் சொல்லுகிருய். நான்பலதேசங்களுக்கும் போயிருந்தேன். கடவுள் தீமை செய்யாதவர்களைக் காப்பாற்றுகிருர் என்று அறிந்துகொண்டேன். சிறு பிள்ளைகளும் நல்ல பிள்ளைகளாய் இருந்தால் அவர் அவர்களைக் கவனிப்பார். எந்த விஷயத்திலும் நாம் அவருடைய சித்தத்தை அறியவேண்டும்' என்று சொன்னன். பிற்பாடு அவன் தான் பொங்கிச் சாப்பிடும் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு தன் வழியே போனன். சுந்தரமும் பள்ளிக்கூடத்திற்குப் போனன். சுந்தரம் பரதேசியைத் திரும்பக் காணவில்லை. ஆனல் அவன் சொன்னவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டான்.

கர்த்தருடைய ஜெபம்

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக; எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படப்பண்ணாமல், தீமையினின்றும் எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

காலை ஜெபம்

ஆண்டவரே! தேவரீர் என்னைப் போன இராத்திரியில் காப்பாற்றினதற்காக நன்றியறிந்து உமக்குத் துதிசெலுத்துகிறேன். இந்தப் பகலிலும் என்னைக் காத்து எல்லாப் பாவத்துக்கும் என்னை விலக்கியருளும். எல்லா மனுஷரும் உம்மை அறிந்து உம்மை வணங்கும்படி இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

மாலை ஜெபம்

தேவனே! இந்த இரவில் என்னைக் கண்ணோக்கிப் பாரும். என் பாவங்களை எல்லாம் மன்னித்து நான் உம்மைச் சிநேகிக்கும்படி செய்யும். என் சிநேகிதரை ஆசீர்வதியும். எல்லா மனுஷர்மேலும் இரக்கமாய் இரும். இந்த இராத்திரியிலே என்னைப் பத்திரமாய்க் காப்பாற்றும். நான் சாகும்போது என் ஆத்துமா உம்மோடே எப்போதும் இருக்க உம்மிடத்தில் சேரும்படி செய்யும். இவைகள் எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை முன்னிட்டுக் கெஞ்சிக் கேட்கிறேன். ஆமென்.

உலகநாதன் செய்த

உலகநீதி

(சுருக்கம்.)

ஓதாம லொருநாளு மிருக்கவேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.
மாதாவை யொருநாளு மறக்கவேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்.
போகாத விடந்தனிலே போகவேண்டாம்.
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்.
நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
நிலையில்லாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்.
நஞ்சுடனே யொருநாளும் பழகவேண்டாம்.
நல்லிணக்க மில்லாரோ டிணங்கவேண்டாம்.
அஞ்சாமற் றனிவழியே போகவேண்டாம்.
அடுத்தவரை யொருநாளுங் கெடுக்கவேண்டாம்.
மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
மாற்றானை யுறவென்று நம்பவேண்டாம்.
தனந்தேடி யுண்ணாமற் புதைக்கவேண்டாம்.
தருமத்தை யொருநாளும் மறக்கவேண்டாம்.
சினந்தேடி யல்லலையுந் தேடவேண்டாம்.
சினந்திருந்தார் வாசல்வழிச் சேரவேண்டாம்.
குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்.
கொலைகளவு செய்வாரோ டிணங்கவேண்டாம்.
கற்றவரை யொருநாளும் பழிக்கவேண்டாம்.
கொற்றவனோ டெதிர்மாறு பேசவேண்டாம்.
கோயிலில்லா வூரில்குடி யிருக்கவேண்டாம்.
வார்த்தைசொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்.

மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்.
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்
முன்கோபக் காரரோ டிணங்கவேண்டாம்.
வழிபறித்துத் திரிவாரோ டிணங்கவேண்டாம்.
கருதாமற் கருமங்கள் முடிக்கவேண்டாம்.
கணக்கழிவை யொருநாளும் பேசவேண்டாம்.
பொருவார்தம் போர்க்களத்திற் போகவேண்டாம்.
பொதுநிலத்தி லொருநாளு மிருக்கவேண்டாம்.
எளியாரை எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்.
சேராத விடந்தனிலே சேரவேண்டாம்.
செய்தநன்றி யொருநாளு மறக்கவேண்டாம்.
ஊரோடுங் குண்டுணியாய்த் திரியவேண்டாம்.
உற்றாரை யுதாசினங்கள் சொல்லவேண்டாம்.
பேரான காரியத்தைத் தவிர்க்கவேண்டாம்.
பிணைப்பட்டுத் துணைப்போய் நீ திரியவேண்டாம்.
மனஞ்சலித்துச் சிலுகிட்டுத் திரியவேண்டாம்.
கண்ணழிவு செய்துதுயர் காட்டவேண்டாம்.
காணாத வார்த்தையைக்கட் டுரைக்கவேண்டாம்.
புண்படவே வார்த்தைகளைச் சொல்லவேண்டாம்.
புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்கவேண்டாம்.
மறம்பேசித் திரிவாரோ டிணங்கவேண்டாம்.
வாதாடி வழக்குரைத்துச் சொல்லவேண்டாம்.
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
ஏசலிட்ட உற்றாரை நத்தவேண்டாம்.
திறம்பேசிக் கலகமிட்டுத் திரியவேண்டாம்.
தெய்வத்தை யொருநாளு மறக்கவேண்டாம்.

உலகநீதி அரும்பத விளக்கம்

எண்கள் பாட்டின் எண்கள்

அஞ்சாமல் .... 11 பயப்படாமல்.
அடுத்தவர் .... 12 தஞ்சம் அடைந்தவர்.
அல்லல் .... 17 வருத்தம்.
இணங்க .... 4 சிநேகஞ்செய்ய.
இறந்தாலும் .... 47 சாகும்படி வந்தாலும்.
உதாசினம் .... 37 கெட்ட பேச்சு.
உறவு .... 14 சிநேகம்.
உற்றார் .... 37 பந்துக்கள்.
எதிர்மாறு .... 22 எதிர்த்த பேச்சு.
எளியார் .... 33 ஏழைகள்.
ஏசலிட்ட .... 48 நிந்தித்த.
ஓதாமல் .... 1 படியாமல்.
கட்டுரைக்க .... 42 உறுதியாகச் சொல்ல.
கருமம் .... 29 காரியம்.
கலகமிட்டு .... 49 சண்டை செய்துகொண்டு.
குண்டுணி .... 36 கோள் சொல்லுகிறவன்.
கொலை .... 20 கொல்லுதல்.
கொற்றவன் .... 22 இராஜன்.
சிலுகிட்டு .... 40 கலகம் செய்துகொண்டு.
சினந்து .... 18 கோபங்கொண்டு.
தவிர்க்க .... 38 ஒழிக்க.
திறம் .... 49 வல்லமை.
துயர் .... 41 துக்கம்.

நஞ்சு	9	விஷம்.
நத்து	48	உறவாடு.
நெஞ்சார	7	மனம் அறிய.
பழக	9	சிநேகஞ்செய்ய.
பறித்து	28	கொள்ளையிட்டு.
பாராட்டி	19	பலமுறை சொல்லிக்கொண்டு.
பிணைபட்டு	39	ஜாமீனாகி.
புண்பட	43	மனம் வருந்தும்படி.
புறஞ்சொல்லல்	6, 44	பின்னால் பழித்தல்.
பேரான	38	பெரிய.
பொதுநிலம்	32	பலபேருக்குப் பொதுவான இடம்.
பொருவார்	31	சண்டைசெய்கிறவர்.
பொல்லாங்கு	2	கெட்ட பேச்சு.
போக்கு	13	வழி.
போர்க்களம்	31	சண்டைசெய்யும் இடம்.
மதியாதார்	25	சட்டைசெய்யாதார்.
மறம்	45	பாவம்.
மாதா	3	தாய்.
மாற்றான்	14	சத்துரு.
முன்கோபம்	27	யோசிக்காமல் கொள்ளும்கோபம்.
மூத்தோர்	26	பெரியவர்கள்.
வஞ்சனை	4	தந்திரமான காரியம்.
வாதாடி	46	வாய்ச்சண்டை செய்து.
வார்த்தை	24	வீண் பேச்சு.

இராஜாவை வாழ்த்தல்

1. கர்த்தாவே, ராஜனை,
எங்கள் நல் வேந்தனை
காப்பாற்றுமே;
வெற்றி கெம்பீரமும்
கீர்த்தி ப்ரதாபமும்
தீர்க்காயுள் ஆட்சியும்
நீர் ஈயுமே.

2. கர்த்தாவே, எழும்பும்
மாற்றார் எல்லாரையும்
நீர் வீழ்த்துமே;
ராஜ விரோதிகள்
செய் மோசம் சூதுகள்
விலக்கி நன்மைகள்
தந்தாளுமே.

3. அருட் ப்ரகாசமும்
மேலான பாக்யமும்
நீர் ஈயுமே;
ப்ரஜைகள் வாழவே,
செங்கோலை ஓச்சவே,
ராஜாவை, தேவனே,
காப்பாற்றுமே.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1914

புதிதாய் வெளியிட்டிருக்கும்

வித்தியா மாலிகை என்னும்

STANDARD TAMIL READERS

கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தார் (C. L. S.) இப்பொழுது அச்சிட்டு வெளியிட்டிருக்கும் 'வித்தியா மாலிகை' என்னும் புதிய தமிழ் வாசக புத்தகங்கள் பள்ளிக்கூட முகாமைக்காரர் ஆசிரியர் என்னும் இருதிறத்தவராலும் விசேஷமாய்க் கவனிக்கப்படத்தக்கவை. இத்தொடர்ப் புத்தகங்கள் அரிதும் புதிதுமான அநேக விஷயங்களைத் தம்முள் அடக்கியிருப்பதுமன்றி, பள்ளிக்கூடங்களின் பற்பல வகுப்புகளுக்கேற்கச் சிறந்த தெள்ளிய நடையில் சென்னை வித்தியா விதிகளின் நிபந்தனைகட்குப் பொருந்துமாறு எழுதப்பட்டுள்ளன. இவற்றில் அநேக அழகான படங்கள் சேர்க்கப்பட்டிருப்பதோடு, ஒவ்வொரு புத்தகத்தின் முகப்பிலும் வர்ணம் தீட்டிய முகப்புப் படமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவை இவ்விராசதானியில் மாத்திரமல்ல, தமிழ் வழங்கும் எந்நாட்டிலும் பயன்படவேண்டுமென்பதே எமது கோரிக்கை.

வித்தியா மாலிகை

					அ.	பை.
பாலபாடம் ...	... 32	பக்கம்	...	...	0	9
முதற் புத்தகம்	... 64	"	...	...	1	9
இரண்டாம் புத்தகம்	... 90	"	...	...	2	0
மூன்றாம் புத்தகம்	... 100	"	...	...	2	6
நான்காம் புத்தகம்	... 112	"	...	...	2	6

பள்ளிக்கூடத் தமிழ்ப் புத்தகங்கள்

C. L. S. தமிழ் வாசக புத்தகங்கள் சென்னை வித்தியா விதிகளின் நிபந்தனைகளுக்குப் பொருந்தியிருக்கின்றனவென்று வித்தியா தலைவர் (Director of Public Instruction) என்னும் அதிகாரி அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

	அ.	பை.
முதற்பாடம்	0	6
முதல் வாசக புத்தகம்	1	6
இரண்டாம் வாசக புத்தகம்	2	0
மூன்றாம் வாசக புத்தகம்	2	0
நான்காம் வாசக புத்தகம்	2	0
ஐந்தாம் வாசக புத்தகம்	2	6.
ஆறாம் வாசக புத்தகம்	3	0
ஏழாம் வாசக புத்தகம்	4	0
எட்டாம் வாசக புத்தகம் (புதிதாய் இயற்றப்பட்டது) ...	6	0
ஒன்பதாம் வாசக புத்தகம் (" ") ...	8	0
பெண்களுக்கேற்ற நான்காம் வாசக புத்தகம்	2	0
பன்மணிக்கோத்து, முதற்பாகம்	2	0
" இரண்டாம் பாகம்	3	0
இலக்கண வினாவிடை, முதற் புத்தகம்	1	0
" " இரண்டாம் புத்தகம்	2	6
இலக்கணச் சுருக்கம், முதற் புத்தகம்	1	6
சென்னை சமஸ்தான பூமிசாஸ்திரம்	5	0

7 E. 50 M. T. 255 M.